
### பணியின் போது உயிரிழந்த

# தொழிலாளியின் குடும்பத்திற்கு நிதி உதவி

உடுமலை, அக்.15-

மடத்துக்குளத்தை அடுத்த பொத்தநாயக்கனூரை சேர்ந்தவர் தசரதன் (வயது 61). இவர் உடுமலையை அடுத்த பாலப்பம்பட்டி அருகே உள்ள தனியார் நிறுவனத்தில் பணி செய்து வந்தார்.



தசரதன் இ.எஸ்.ஐ. காப்பீட்டு தொகை மாதந்தோறும் செலுத்தி வந்தார். இந்த சூழலில் கடந்த ஜூன் மாதம் 10-ந் தேதி பணியை முடித்துக் விட்டு மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு திரும்பி சென்று கொண்டு இருந்த போது சாலை விபத்தில் அவர் பலியானார்.

அதைத் தொடர்ந்து உரிய விசாரணையின் பேரில் அளித்த அறிக்கையின் படி கோவை துணை மண்டல அலுவலக இணை இயக்குனர் (பொறுப்பு) கே.ஆர். ரவிக்குமார் மற்றும் துணை இயக்குனர் ப.பெருமாள் ஆகியோர் இழப்பீடு வழங்குமாறு உத்தரவிட்டனர். அதன் தொடர்ச்சியாக தசரதன் குடும்பத்திற்கு இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் உதவித்தொகை மற்றும் மாதாந்திர உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நேற்று உடுமலையில் உள்ள தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது தசரதன் மனைவிக்கு அலுவலக மேலாளர் சரவணபிரசாத் உதவித்தொகையாக ரூ.25 ஆயிரத்து 940 மற்றும் மாதாந்திர உதவித் தொகையாக ரூ.7 ஆயிரத்து 180-ஐ வழங்கினார். இந்த நிகழ்வின் போது அதிகாரி ரமேஷ், காசாளர் லால்சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.